ශ්‍රී ලංකා පේෂකර්ම සහ ඇඟලුම් ආයතනය

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்

Sri Lanka Institute of Textile and Apparel

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2021





State Ministry of Batik, Handloom Textile & Local Apparels Products
Kandawala Estate, No.02, General Sir John Kotelawala Mawatha, Ratmalana,
Sri Lanka.
Phone : +94 11 26 32 406, +94 11 26 36 917 Fax : +94 11 26 36 337, +94 11 26 22 897
E-Mail : info@slita.ac.lk Web : www.slita.ac.lk

SLITA

Sri Lanka Institute of Textile & Apparel

State Ministry of Batik, Handloom and Local Apparel Products

நோக்கு

“புடவைக் கைத்தொழில், ஆடை மற்றும் தோள் உற்பத்தி சார்ந்த கைத்தொழில்களில் பதவியணியின் நிபுணத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல், பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களை மேற்கொள்வதற்கு புகோள ரீதியாக அங்கீகாரம் பெற்ற நிறுவனமாதல்”

செயற்பணி

“நிலைபேறான அபிவிருத்தியை எதிர்பார்த்து உற்பத்தித்திறன், பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் ஆடைகள், தோள் உற்பத்திகள், பிடவைசார்ந்த கைத்தொழில்களின் கூட்டுப் பெறுமதியை மேம்படுத்துவதற்காக நிபுணத்துவம்மிக்க சிறந்த பயிற்சியைக் கொண்ட மனித மூலதனம், நம்பகமான நிபுணத்துவ அறிவு மற்றும் புத்தாக்க தீர்வுகளை சமர்ப்பித்தல்”

நோக்கங்கள்

- பட்டப் பின் படிப்பு மற்றும் பட்டப் பாடநெறிகளை நடாத்தல் மற்றும் பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு டிப்ளோமா மட்டத்திலான கல்வி, பயிற்சி மற்றும் மதியுரை மற்றும் தொழில்நுட்ப சேவைகளை ஆற்றுதல்.
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் மற்றும் வேறு அதுசார்ந்த துறைகளில் தேசிய தரநியமங்களை தாபித்தல் மற்றும் அது தொடர்பில் சான்றிதழ்களை வழங்கிவைத்தல். அத்துடன், பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழிலுக்கான தேசிய கொள்கையை தயார் செய்ய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- வெளிநாட்டு நிறுவனங்கள், கைத்தொழில் மற்றும் ஆய்வுகூடங்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொண்டு ஆய்வுகூட மற்றும் தரம்சார் சேவைகளை ஆற்றி இத்துறையில் உயர் தரத்தைப் பேணிவருவதுடன் உயர் மட்டத்திலான பாடநெறிகளை நடாத்தல்.
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறையில் பட்டம், பட்டப் பின் பட்டம், டிப்ளோமா மற்றும் சான்றிதழ்களை வழங்கிவைக்கும் நோக்கத்துடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கங்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்.
- அரசாங்க நிறுவனங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கற்கை அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில்களின் ஒத்துழைப்புடன் பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழிலில் ஆராய்ச்சிகளை நடாத்தல் மற்றும் உற்பத்திகளை வளர்ப்பதை மேம்படுத்தல் .
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழில்துறை சம்பந்தமான பரிசோதனைகள் மற்றும் வேறு அது சார்ந்த தொழில்நுட்ப சேவைகள் கட்டணங்களை செலுத்துவதன் அடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற பொறிகள் மற்றும் இயந்திரங்கள் பற்றிய சந்தை ஆய்வு, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுக் கற்கை, கருத்திட்ட மதிப்பீடு மற்றும் விலைமதிப்பீடுகளை நடாத்தல்.
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழில் சார்ந்த உற்பத்திகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மற்றும் வேறு தொழில்நுட்ப தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையை பேணிவருதல்.
- பிடவைக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சர்வதேச, தேசிய மற்றும் கம்பனிகள் இயைபுக் கட்டமைப்பு தரநியமங்கள் பற்றிய இயைபுச் சான்றிதழ்களை வழங்குதல்.

எமது சேவைகள்

பயிற்றுவித்தல்



ஆராய்ச்சி நடவடிக்கைகள்



தொழில்நுட்ப சேவைகள்



தொழில்நுட்ப கருத்திட்டங்கள் மற்றும் மதியுரை



நிறுவன தகவல்

நிறுவனத்தின் பெயர்	:	இலங்கைபுடைவைமற்றும் ஆடை நிறுவகம்
முகவரி	:	கந்தவலவத்தை இல.2 , ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவலை வீதி, இரத்மலான
பதிவு	:	இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் 2009 ஆம் ஆண்டின் சட்டம் எண் -12
சட்டவடிவம்	:	சட்டரீதியான சபை
அமைச்சகம்	:	பற்றிக் கைத்தறி மற்றும் தேசிய ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு
இயக்குநர்கள் சபை	:	திரு பீ எல் ஏ தர்மகீர்தி (தலைவர்)
		திரு யோகான் லோரென்ச்
		திரு ஏ ஜீ நிஸாந்த
		திரு கே எச் பந்துல பிரனான்டோ
		திரு பீலிக்ஸ் பிரனான்டோ
		திரு சுரேஸ் இந்திக
		திரு கே ஜீ விக்கிரமசூரிய
		திருசந்தன புஷ்பகுமார
கணக்காய்வு	:	கணக்காய்வாளர் தினைக்களம்
தொலைபேசி எண்	:	2632406/2636336
தொலைநகல் எண்	:	2636337
மின்னஞ்சல்	:	director@textile-clothing.lk/info@slita.lk
இணையதளம்	:	www.slita.lk

உள்ளடக்கம்

	பக்கம்
தவிசாளரின் செய்தி	56-57
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	58-59
பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பு பற்றிய கூற்று	60
அபாயப் பகுப்பாய்வு அறிக்கை	61
நிறுவனம் பற்றிய பகுப்பாய்வு	62-65
செயலாற்றுகை விசேட சந்தர்ப்பங்கள்	66-67
கணக்கீட்டுக் கொள்கைகள்	68-70
பொதுவான வெளிப்படுத்தல்கள்	71-73
நிதி நிலைமைக் கூற்று	74
நிதிச் செயலாற்றுகைக் கூற்று	75
காசுப் பாய்ச்சல் கூற்று	76
தேறிய சொத்துக்கள் / உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று	77
நிதிக் கூற்றுக்களுக்கன குறிப்புக்கள்	78-104
செயலாற்றுகைச் சுட்டி	105-106
நிதிக் கூற்று அறிக்கை	107-111
துறைசார் வருமான செலவின வகைப்படுத்தல்	112
2021 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்	113-119
2022 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத் திட்டங்கள்	120
தேசிய கணக்காய்வுகூற்று	121-129

தவிசாளரின் செய்தி - இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம் (SLITA)

இலங்கையின் ஆடைக் கைத்தொழில் என்பது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை உழைத்துக் கொடுக்கின்ற முன்னணி வகிக்கும் அம்சம் என்ற வகையில் பொருளாதார ஒழுங்கமைப்பை தயார் செய்யும் இன்றைய நிலைமைக்கு அமை கனிசமான வகிபாகத்தில் செயற்படும் அம்சமொன்றாகும். எமது நாட்டின் நோக்குடன் முன்னோக்கிச் சென்று, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய சிறந்த வாய்ப்பைக் கொண்டுள்ள கைத்தொழிலாக அரசாங்கத்தினால் அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, நாட்டுக்கு அந்நியச் செலாவணியை உழைத்துத் தருகின்ற ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன் 06 எனும் இலக்கை நோக்கிப் பயணிக்கின்ற பிரதான வர்த்தகப் பண்டமொன்றாகும். இவ்வாறு நோக்கும் போது, கைத்தொழில், தமது தரம், போக்குவரத்து மற்றும் சர்வதேச சந்தையின் பூகோள போட்டித்தன்மைக்கு முகம் கொடுப்பதற்கான சர்வதேச தரநியமங்களைப் பேணிவருதல் ஆகிய சவால்களை எதிர்கொள்கின்றது. மேலும், ஆடைத்தொழிலின் மூலம் உழைத்துக் கொள்ளப்படுகின்ற அந்நியச் செலாவணியானது மதிப்பிடத்தக்க மட்டத்திற்கு வளர்ச்சியை வெளிப்படுத்துவதுடன், நாட்டின் வருமானத்தில் கனிசமானளவு இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவதுடன் ஜிஎஸ்பீ பிளஸ் நிலைமையிலும் வளர்ச்சி வெளிப்படுத்தப்படுவது, பூகோள சந்தையில் கடுமையான தரநியமங்கள் பற்றிய அளவுகோள்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற பின்னணியிலாகும். இந்த நிலைமையை அடைந்துகொள்வதற்கு, நாட்டின் ஊழியப்படையணி வழங்கிவருகின்ற பங்களிப்பு அளப்பரியது. எனவே, கைத்தொழிலில் பயிற்றப்பட்ட ஊழியத்திற்குக் காணப்படுகின்ற தொழில்வாய்ப்புக்கள் பாரியளவில் உருவாகியுள்ளன. இந்த நிலைமை, உண்மையில் நாட்டின் இளைஞர் சமுதாயத்திற்கு கூடுதலான வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதற்காக சமர்ப்பிக்கப்படக்கூடியவாறு அரச கொள்கையுடன் ஏற்புடையதாக்கிக் கொள்ளக்கூடிய விடயமொன்றாகும்.

கடந்த ஒரு சில தசாப்தங்களில், முன்னோடி மட்டத்திலான பயிற்சி நிறுவகமாக நடவடிக்கை மேற்கொண்டு இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம் கைத்தொழிலின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து நடவடிக்கை மேற்கொள்வதுடன், நிறுவகத்தின தொழில்சார் பதவியணியினர் போட்டித்தன்மைமிக்க சந்தையில் உயர் மட்டத் தரத்தைப் பேணிவருவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார்கள். எமது சேவைகள் நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்தொழிலின் தேவைகளுக்கு அமைய மிகவும் பரந்தளவில் வியாபித்துள்ளதுடன், ஊழியப் பயிற்சி முதல் மதியுரை சேவைகள் மற்றும் ஆய்வுகூட ஆய்வுகளை நடாத்துவது வரையான மட்டங்களில் பரந்துள்ளன. தமது மாணவர்களுக்கு நவீன பயிற்சி வசதிகளை அறிமுகம்

செய்துள்ளதை அடுத்து, பயிற்சி மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஊழியத்தை கைத்தொழிலுக்கு பெற்றுக் கொடுக்கும் நிறுவகம் என்ற வகையில் மென்மேலும் பலமடைந்துள்ளது என்று கூற முடிந்துள்ளமை நிறுவகத்திற்கு பெருமையளிக்கின்றது. தற்போது இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம் எதிர்காலத்தில் எழக்கூடிய சவால்களுக்கு பலம்மிக்கவாறு முகம் கொடுத்து பூகோள நியதிகளுக்கு அமைவாக புதிதாக ஏற்படுகின்ற சந்தை நிலைமைகளின் மூலம் எழக்கூடிய கடும் போட்டித்தன்மைக்கு முகம் கொடுக்கக்கூடிய மட்டத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

நிறுவகத்தின் பயணப் பாதைக்கு வழிகாட்டி வழிப்படுத்தும் தவிசாளர் என்ற வகையில், தொடர்ச்சியாக போட்டித்தன்மையை வளர்த்துக் கொள்ளும் பூகோள சந்தைக்கு வாய்ப்பு மற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக சேவைகளை நிறைவேற்றுவதற்கு நிறுவகத்திற்கு ஆற்றலுள்ளது என்பதை நான் உறுதியாகக் கூறமுடியும் என்பதுடன், இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் பதவியணியினர் வழங்கி வருகின்ற ஒத்துழைப்பு மற்றும் நேர்வரிசை அமைச்சினால் வழங்கப்படுகின்ற அயராத ஒத்துழைப்பை மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.

திரு. பி எல் ஏ ஜே தர்மகீர்த்தி
தவிசாளர் - இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம்
செயலாளர், பற்றிக் கைத்தறி மற்றும் தேசிய ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகமானது (ளுடுஜவுயு)இ அதன் முன்னைய இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்பட்டதை அடுத்து, மென்மேலும் சிறந்த அன்னியோன்ய செயற்பாடுகளில் ஈடுபடுவதை நோக்காகக் கொண்டு பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாக மாற்றமடைந்தது. அதற்கமைய, ஒரு நிறுவனம் என்ற வகையில் கடந்த சில ஆண்டுகளாக இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம் தமது வெற்றிகரமான / அபிவிருத்திப் பாதையின் ஊடாக தமது பிரதான தொழில்சார் பணிகளை கைத்தொழிலுக்குப் பெற்றுக் கொடுத்து வருகின்றது. தமது இறுதி இலக்கை நோக்கிய பயணத்தின் போது, தொடர்ச்சியாக விரிவடைந்து வருகின்ற பூகோள சந்தையில் நிறுவகம் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற புத்தாயிரமாம் ஆண்டின் சவால்கள் பலவாகும். எவ்வாறாயினும், முன்னைய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டதன் மூலம் எழுந்துள்ள நீண்டகாலமாக பெற்றுக் கொண்ட அனுபவத்தின் மூலமான ஆற்றல்களின் காரணமாக மேற்படி சகல சவால்களுக்கும் முகம்கொடுக்க நிறுவகம் பின்நிற்பதில்லை.

நிறுவகமானது, பிரதானமாக கைத்தொழிலின் தேவைகளுக்கு பொருத்தமானவாறு பிரதான வியாபார காரணிகளை உருவாக்குவதில் திறமைமிக்க உயர் தரத்தைக் கொண்ட பதவியணி உறுப்பினர்களைக் கொண்ட குழுவை உள்ளடக்கியுள்ள கல்விசார் நிறுவகமாகும். கைத்தொழிலின் எதிர்பார்ப்புக்கள் உயர் மட்டத்தில் காணப்படுவதனால், கைத்தொழிலின் கேள்விக்கு ஏற்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு நிறுவனம் சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. இதன் பெறுபேறாக, ஒரு புறம் நாம் இலங்கையின் நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறையின் உன்னதநிலையின் கேந்திர நிலையமாக மாறுவதற்காக பட்டம் அளிக்கும் ஆற்றலை பெற்றுக் கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மேலும், கூடுதலான மாணவர்களுக்கு உயர் கல்விக்கான மேடையை உருவாக்கும் அபிலாசையுடன், தென்கிழக்காசியாவின் உயர் கல்வி நிறுவனங்களுடன் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது.

அத்துடன், நிறுவகத்தினால் இளம் சமுதாயத்தினர் மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வெற்றிகரமான தொழில்வாண்மை தொடர்பில் திருப்தியடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி, தமது தொழில்சார் எதிர்காலப் பயணத்தை மென்மேலும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் தொழில்சார் வெற்றியை அடைந்துகொள்வதற்கு நிறுவகம் ஊக்குவிக்கின்றது. இலங்கையர்கள் மாத்திரமன்றி பாகிஸ்தான், இந்தியா மற்றும் பங்களாதேசம் போன்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பாடநெறிகளை கற்பதற்கு அனுமதி பெற்றுள்ளார்கள் என்பதுடன், அயல்

நாடுகளிலும் திறன் அபிவிருத்திக்கு தமது சேவையை வியாபிக்கக் கிடைத்துள்ளமை நிறுவகத்தின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு திருப்புமுனையாக அமைந்துள்ளது.

முன்னைய ஆண்டில் பரிசோதனை, பயிற்சி மற்றும் மதியுரை ஆகிய துறைகளின் மூலம் பெற்றுக் கொண்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டில் ஆய்வுகூடங்களின் மூலம் உருவாக்கப்பட்ட வருமானம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன், குறித்த ஆண்டு தொடர்பில் கவனம் செலுத்தும் போது பயிற்சி வருமானம் அதிகரித்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மதியுரைச் சேவைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் மாற்றமடையாது காணப்படுகின்றது என்பதும் தெரியவருகின்றது. அத்துடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வு ஆண்டுக்கு நிறுவனத்தினால் உழைத்துக் கொள்ளப்பட்ட மொத்த வருமானம் அதிகரித்துள்ளது என்பது தெரியவருகின்றது. ஆண்டினுள் நடாத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பாடவிதானம் கைத்தொழிலின் அவசியத்தன்மைக்கு அமைய திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், ஆய்வுகூடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை புதுப் பொழிவுடனான வசதிகளைக் கொண்டதாக மேம்படுத்தியிருப்பது சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்புடையவாறு தரநியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டியுள்ளதனாலாகும்.

கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் பதவியணியினர் வழங்கிவரும் ஒத்துழைப்பை நான் மிக்க உயர்வாக மதிக்கின்றேன். நாட்டின் முன்னோடி நிறுவகம் என்ற வகையில் உச்சநிலையை அடைந்துகொள்வதற்காக தவிசாளர் மற்றும் நிருவாக சபை மேற்கொண்டு வருகின்ற அயராத முயற்சிகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் தொடர்பில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக நிறுவகத்தின் ஊழியர்களின் அர்ப்பணிப்புத் தொடர்பிலும் இங்கு நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகமானது உன்னதநிலையை நோக்கிப் பயணிக்கின்றது என்று நான் நம்புகின்றேன்.

கட்டிடக் கலைஞர் திரு சரத் பெர்ணாந்து
பணிப்பாளர் நாயகம்
இலங்கைபுடைவைமற்றும் ஆடை நிறுவகம்

பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பு பற்றிய கூற்று

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்புக்கள், கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களை விட வித்தியாசமானதாகும்.

நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, பணிப்பாளர் நாயகத்தினால் நிதி ஆண்டின் இறுதியில் நிறுவனத்தின் நடவடிக்கைகளின் நிலைமை மற்றும் அதன் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் ஒவ்வொரு நிதி ஆண்டுக்கும் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வது அவசியமாகும்.

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது உகந்த கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்துகொண்டு நிலையான முறையில் பயன்படுத்தி நியாயமான மற்றும் அறிவுப்பூர்வமான முடிவுகள் மூலம் உதவி வழங்கப்பட்டுள்ளதென்றும் ஏற்புடையவாறு உகந்த சகல கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டுள்ளதென்றும் பணிப்பாளர் நாயகம் கருதுகின்றார்.

நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு போதியளவு வளங்கள் உள்ளன என்றும், இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் நாயகம் நம்புகின்றார். மேலும், நிறுவனத்தின் நிதி நிலைமையை நியாயமான உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்தப் போதியளவு கணக்கு அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணிவரப்படுவதை உறுதி செய்தல் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் நிதி அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையனவாகும் என்பதை உறுதி செய்வதும் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இது தொடர்பில் மோசடி மற்றும் வேறு முறைகேடுகளைத் தடுப்பதற்கு மற்றும் வெளிப்படுத்துவதற்கு உகந்த உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை தாபிப்பது தொடர்பில் முறையான கவனத்தை செலுத்துவதும் பணிப்பாளர் நாயகத்துக்கு உரித்தான பொறுப்பாகும்.

இக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் நாயகம் தமது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளார் என்று அவர் நம்புகின்றார். மேலும், பணிப்பாள் நாயகமும் தமது கருத்துக்கு அமைய ஐந்தொகை திகதியில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சகல நியாயாதிக்க கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதாக அல்லது உரியவாறு நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் உறுதி செய்கின்றார்.

அபாயப் பகுப்பாய்வு அறிக்கை

எந்தவொரு தொழில்முயற்சியும் அதற்கே தனித்துவம்மிக்க வியாபார அபாயங்கள் இன்றி காணப்படும் என்று கூற முடியாது என்பதுடன், வியாபார வட்டத்திற்குள் அபாய முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு கட்டாய வாசிப்பொன்றாக மாறியுள்ளது. வியாபார நடவடிக்கையொன்றை முன்னெடுத்துச் செல்லும் போது அபாயம் என்பது தனித்துவமான பண்பொன்றாகும் என்பதுடன் அது சம்பந்தமான செயற்பாட்டு முகாமைத்துவ செயன்முறையின் போது அபாய முகாமைத்துவம் இடையீட்டுப் பண்பொன்றாக மாறியுள்ளது.

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம் என்பது, நிறுவனக் கட்டமைப்பை நல்ல முறையில் வெளிப்படுத்துகின்ற பாராளுமன்ற சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து தாபிக்கப்பட்டுள்ள வியாபாரச் செயன்முறையில் ஏற்படக்கூடிய அபாயங்களை வழிப்படுத்துவதற்கு நல்ல முறையில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சட்டகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் நியாயாதிக்க நிறுவகமொன்றாகும். அதன் வியாபாரத்தின் தன்மை தொடர்பாக நெருக்கமான பகுப்பாய்வு செய்யும் போது, நடவடிக்கை, சந்தை மற்றும் ஒழுங்குறுத்தல் துறைகளில் பல அபாய அம்சங்களுக்கு உட்பட்டிருப்பதை அவதானிப்புச் செய்ய முடியும்.

வியாபாரத்தின் தன்மை மூலதன முதலீடுகளுக்கு அமைவாக சிறிய மட்டத்தில் காணப்படும் போது, அதனுடன் இணைந்த அபாயங்களும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், இன்று வியாபார வழிப்படுத்தலுக்கு சந்தையின் அபாயம் உயர் மட்டத்தில் காணப்பட முடியும். மேலும், மாற்று வழிமுறையாக, வியாபார நடவடிக்கைகளை பரந்தளவில் வழிப்படுத்துவதற்காக நிறுவகமானது பல்வேறு வழிமுறைகள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன், நடவடிக்கைசார் அபாய வாய்ப்பு / நிகழ்தகவைக் கொண்ட காரணியாக தெரியவருவதனால் நிறுவகம் எப்பொழுதும் மீளாய்வின் ஊடாக உத்தேச தரநியமங்களைப் பேணிவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, வியாபாரமானது நிலையான வியாபாரத் திட்டத்தின் கீழ் வெற்றிகரமாக பயணிக்கும் போது நடவடிக்கைசார் அபாயம் குறைந்த மட்டத்தில் காணப்படும். மேலும், ஏதேனும் அபாயம் காணப்படுமாயின், அவை மனித மூலதனத்துடன் சம்பந்தப்பட்டதான அடிக்கடி அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற கொள்கைகளின் காரணமாக மாற்றமடைகின்ற விடயங்களாகும்.

நிறுவனம் பற்றிய பகுப்பாய்வு

அறிமுகம்

நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை சார்ந்த சேவைகளை வழங்குவதில் பிரபல்யமான நிறுவனங்களில் இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனம்,(ளுடுஜஷுயு) நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறையை பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசின் முக்கிய முன்னோடி நிறுவனமாக முக்கிய இடத்தை வகிப்பதுடன், கடந்த பல தசாப்த காலமாக நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறை சார்ந்த வியாபார உலகில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிறுவனம் நிறுவனங்களை பயிற்றுவித்தல், பரிசோதனை, தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் போன்ற தமது பிரதான வியாபார செயற்பாடுகளின் கீழ் மிகப் பெரும் சேவையை ஆற்றிவருவதுடன், நிறுவனத்திடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்வோருக்கு பலம்மிக்க நிலைத்திருத்தலைப் பெற்றுக் கொடுத்து விசேடமான செயற்பணியொன்றை ஆற்றிவருவதுடன், கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்கு மற்றும் அதன் வாய்ப்புக்கள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கு கைத்தொழில்துறை சேவைகளைப் பயன்படுத்துகின்றது. இதன் பெறுபேறாக, கைத்தொழிலாளர்களுக்கு வியாபாரத் துறையில் நிலையான தன்மையை அடைந்துகொண்டு அதிக இலாபம் உழைக்கும் நிலைக்குச் செல்வதற்கு அவர்களினதும் ஆற்றல்களை மெருகூட்டிக் கொள்ள முடிந்துள்ளது. இந்தப் போக்கு தொடர்ச்சியாக காணப்பட்டு வருவதுடன், எமது நிறுவனம் மற்றும் அறிவு பற்றிய ஊக்குவிப்புச் சக்தியாக எமது பங்களிப்பு மூலம் புதிய கைத்தொழில் கோரிக்கைகள் மற்றும் தேவைகளுடன் வளர்ச்சியடைய எதிர்பார்க்கின்றோம்.

நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறையின் பூகோள மேடையில் உற்பத்தி பணிகள் துறையில் நவீன தொழில்நுட்ப முறைகளின் வளர்ச்சியை அடுத்து போக்குகள் மற்றும் புரட்சிகரமானதாக இருப்பதுடன் வாடிக்கையாளர்கள் தமது திருப்திக்கு ஏற்றவாறு உகந்த உற்பத்தியை தெரிவு செய்துகொள்வது தொடர்பில் முன்னொரு போதுமில்லாதவாறு அறிவுமிக்கவர்களாக இருக்கின்றார்கள். இதன் விளைவாக உற்பத்தியாளர்கள் தற்போது சந்தைக்கு அனுப்பும் தமது உற்பத்திகள் அவற்றை பயன்படுத்துவோரின் விருப்பத்திற்கு உகந்தது என்பதை உறுதி செய்துகொள்வதற்கு கவனமாக நடவடிக்கை மேற்கொள்கின்றது. வாடிக்கையாளர்கள் சந்தையில் அபூர்வமான ம்றறும் குறைகள் அற்ற உற்பத்திகளை தேடுவதனால் இன்று உற்பத்தி மற்றும் பயன்படுத்துவோரின் மனநிலைக்கு இடையே போட்டி நிலவுகின்றது.

இந்த செயன்முறையின் போது, இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றம் ஆடை நிறுவனம், பயிற்சியளிக்கும் நிறுவனம் என்ற வகையில் கைத்தொழிலில் தூரநோக்குடைய தலைவர்களை உருவாக்குவதற்கு முக்கியமாக பங்களிப்பு வழங்கி வருகின்றது. எழுந்துவரும் நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத்துறைசார்ந்த வியாபார உலகுக்குத் தேவையான அடிப்படை வியாபார சேவைகளாக பயிற்றுவித்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதனால் இது தொடர்பில் இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனத்தின் செயற்பணி மிகவும் முக்கியமானதாகும். பூகோள சந்தையில் பயன்படுத்தப்படாத

சந்தர்ப்பங்களை கண்டறிவதற்கு நிறுவனம் தற்போது பாடசாலையிலிருந்து வெளியேறுவோர் மற்றும் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள ஆட்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் கைத்தொழில் துறையில் கேள்வி நிலவும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பயிற்சி வழங்க ஆயத்தமாக உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் நிறுவனம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதன் மூலம் குறிப்பிடத்தக்களவு வருமானத்தை உழைத்துக் கொண்டுள்ளதுடன், பரிசோதனை நடவடிக்கைகள் மூலம் உழைத்துக் கொள்ளப்பட்ட வருமானம் சாதாரண மட்டத்தில் காணப்படுகின்றது. நிறுவனத்தில் இணைந்துகொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை உண்மையில் துரிதமாக அதிகரித்துசென்று ஆயிரக்கணக்கினை அடைந்துள்ளதுடன் அடுத்துவரும் ஆண்டுகளில் மாணவர்களை அனுமதிப்பதை அதிகரித்துக் கொள்வதற்கு மேலதிக வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன் உற்பத்தித்திறன் எண்ணக்கரு பிரபல்யமடைந்து வருவதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் போட்டியிடுவதற்கு உற்பத்தித்திறனை மேம்படுத்தத் தேவையான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை குறித்த கைத்தொழில்களில் ஈடுபடுவோருக்கு பெற்றுக் கொடுத்தல். இதற்கு சமாந்தரமாக, குறைந்த வசதிகளைக் கொண்ட மாவட்டங்களைச் சேர்ந்த சமுதாயத்தினருக்கு அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு வீட்டுக் கைத்தொழில்களுக்கு பயிற்சிப் பாடநெறி வழங்குவது தொடர்பில் நிறுவனம் தமது சேவைகளுக்கு இடையே முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த சமுதாயத்தினருக்கு நிலைபேறான அபிவிருத்தி ஊடாக தமது வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது. நிறுவனம் அபிவிருத்திப் பாதையில் முன்னேற்றத்தை நோக்கி பயணித்து வருவதனால் நிறுவனம் வளர்ச்சியடைவதற்கு பாரிய பல வியாபார வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிருவாக சபை

நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் விதிகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் நிருவாக சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி தீர்மானங்கள் பணிப்பாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும். நிருவாக சபையின் கூடட்ங்கள் மாதாந்தம் நடைபெறுவதுடன், முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களை மீளாய்வு செய்வதும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

2021.12.31 ஆம் திகதிக்கு நிருவாக சபை

1	திரு பீ.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி	தவிசாளர்	பத்திக், கைத்தறி ஆடை மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சு
2	திரு யொஹான் லொரன்ஸ்	உறுப்பினர்	இணைந்து ஆடை சங்கங்களின் கூட்டமைப்பு
3	திரு ஏ.ஜி. நி'ாந்த	உறுப்பினர்	நிதி அமைச்சு
4	திரு கே.எச். பந்துல பெர்ணாந்து	உறுப்பினர்	இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களின் சங்கப் பேரவை
5	திரு பீலிக்ஸ் பெர்ணாந்து	உறுப்பினர்	இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களின் சங்கம்
6	திரு சுரே' இந்திக்க	உறுப்பினர்	ஆடை உற்பத்திக் கைத்தொழில்
7	திரு கே.ஜி.ஆர். விமலசூரிய	உறுப்பினர்	கைத்தொழில் அமைச்சு
8	திரு சந்தன பு'்பகுமார	உறுப்பினர்	ஆடை உற்பத்திக் கைத்தொழில்

2021.12.31 ஆம் திகதிக்கு பதவியணி

ஒட்டுமொத்த பதவியணி – 95

வகை	முகாமைத்துவ செயற்பாடு	தொழில்நுட்ப ∴ செயற்பாட்டு	நிதி	பொது/நிருவாக
ஊழியர்கள்	05	49	04	29
பயிலுனர்கள்	-	05	-	-
ஒப்படை அடிப்படையில்	-	02	01	-

திரு பீ. சரத் டபிள்யு.கே. பெர்ணாந்து - பணிப்பாளர் நாயகம்
B.Sc (BE), M.Sc (Arch), RIBA, AIA (SL)

திரு எஸ். இளங்கோவன் - பணிப்பாளர் (பயிற்சி மற்றும் தொழில்நுட்பம்)
B.Sc. (Eng.) (Text),MBA,AMIE(SL)

திரு பீ.வீ.எஸ். விஜயரத்ன - பணிப்பாளர் - (நடவடிக்கை)
M.Sc.(MIT), M.Sc (Mgt.), B.Tech(Eng.)Hons
AMIE(SL),LLB

திரு எம்.பீ. கன்னங்கர - பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)
MBA(P.I.M.)
B.Sc.(Col.), PG. Dip in International Rel:(BCIS)
Dip.in American Professional Qualification-HRM
LLB (UG),Diploma in Legal Studies.

திருஈ.டபிள்யு.ஏ.ஐ. சிறிவர்த்தன - கணக்காளர்
B.Sc Business Administration (Special), IBSL, LICA

திரு கே.பீ.எம். பேரேரா - உள்ளகக் கணக்காய்வாளர்
B.Sc. Management

சிரேஷ்ட பதவியணி (தொழில்நுட்பம்)

திரு ஜி.கே.கே.எஸ். குமார - பிரதம தொழில்நுட்பவியாளர், B.Sc.(Eng.) (Text),MBA,AMIE(SL)

திரு பி.எல்.எஸ்.பீ. நி'ாந்த - பிரதம தொழில்நுட்பவியாளர்,B.Sc. (Hons.),M.Sc.(Text.)


திருமதி கே.ஏ.ஆர்.வீ. அபேவர்த்தன - பிரதம தொழில்நுட்பவியாளர், NDT (Text. Tech.)

திரு கே. ஜகதீ'ன் - பிரதம தொழில்நுட்பவியாளர்,B.Sc.(Eng.)(Text),M.Sc.(Text),AMIE(SL)


திரு டபிள்யு.எம்.எஸ்.கே. விஜேபாஹு - பிரதம தொழில்நுட்பவியாளர்,B.Sc. (Eng.),M.Sc (Text),AMIE(SL)

செயலாற்றுகை விசேட சந்தர்ப்பங்கள்


1. நிதிச் செயலாற்றுகை




ஒரு ஊழியரின் வருமானம்



2. பௌதீக செயலாற்றுகை


பயிற்றுவித்தல்
5409
3751
6,119
1261
2,501
201
137
171
57
131
2017
2018
2019
2020
2021
பாடநெறி எண்ணிக்கை
பங்கேற்றோர் எண்ணிக்கை


பரிசோதித்தல்
49,529
5,619
47,478
7,502
48,970
7,683
51,988
4,953
61871
5,960
2017
2018
2019
2020
2021
பரிசோதனைகளி
மாகிரிகளின:

கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருமாறாகும்.

1. தயார் செய்யும் அடிப்படை

(i) நின்ற அடிப்படையில் கணக்கீட்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமயங்களுக்கு ஏற்புடையதாகின்றன. நிறுவனத்தின் நிலைத்திருத்தலை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், ஒட்டு மொத்த காலப்பகுதியிலும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

(ii) பஞ்சாங்க ஆண்டு நிறுவனத்தின் நிதி ஆண்டாகும்.

(iii) நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்குகள் தொடர்பில் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகள்

1. ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள்

காணி தவிர சகல உட்கட்டமைப்பு வசதிகள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் வரலாற்றுக் கிரய /கணிப்பிடப்பட்ட விலையில் திரட்டிய தேய்மானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

செலவினத்தை கணிப்பிடும் போது ஒரு சொத்து அதன் உத்தேச பயன்பாட்டுக்கு உகந்த நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட சகல செலவுகளும் செலவினத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. விசேட புதுப்பித்தல் மூலம் ஒரு சொத்தின் பிரதானமாகமதிப்பிடப்பட்ட விளைதிறன்மிக்க ஆயுட் காலம நீடிக்கப்படுமாயின் அல்லது மீள் அறவிட்டுக் கொள்ளத்தக்க பெறுமதி அதிகரிக்கப்படுமாயின் மேற்படி புதுப்பித்தல் நடவடிக்கை மூலதனமாக்கப்படும். பராமரிப்பு, புதுப்பித்தல் மற்றும் சிறு புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு கிடைத்த வருமானம் மூலம் அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அகற்றப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள், பொறி மற்றும் உபகரணங்களின் செலவினத்துக்கு இசைவாக திரட்டிய தேய்வுடன் ஐந்தொகையிலிருந்து நீக்கப்படும். அகற்றல்களின் இலாபம் மற்றும் நட்டம் அவற்றின் உள்வாங்கும் பெறுமதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன், நடவடிக்கை இலாபத்தை தீர்மானிக்கும் போதும் இது கவனத்தில் கொள்ளப்படும்.

2. தேய்மானம்

தேய்மானத்திற்கான ஒதுக்கம் கணிப்பீடு செய்யப்படுவது பின்வரும் மதிப்பீட்டு விளைதிறன்மிக்க ஆயட் காலத்தில் அவ்வாறான சமமான தவணைகளாக பதிவழிப்புச் செய்வதற்கு சகல ஆனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் செலவினம் பற்றிய நேர்கோட்டு அடிப்படையிலான முறை பின்பற்றப்படுகின்றது.

தேய்மானம் செய்வதற்கு பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கட்டிடம்	2.5%
பொறியும், இயந்திரமும்	10%
தளபாடம், பொருத்தல், உபகரணம்	10%
சிற்றுண்டிச்சாலை உபகரணம்	10%
மோட்டார் வாகனம்	10%
கணினி மற்றும் மென்பொருள்	20%
நூல் மற்றும் சஞ்சிகைகள்	10%
ஆய்வுகூட உபகரணம்	10%
வீடியோ நிகழ்ச்சிகள்	25%
கைத்தொழில் தையல் இயந்திரம்	10%

ஆண்டின் முதல் அரைப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு முழுமையான தேய்மான விகிதம் அறவிடப்படுவதுடன், ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் கொள்வனவுகளுக்கு 50மூ ஆன தேய்மான விகிதம் அறவிடப்படுகின்றது.

3. இருப்பு

நிறுவனம் தமது சேவைகளை வழங்கும் போது பயன்படுத்துவதற்கு சகல பொருட்களினதும் இருப்புக்களைப் பேணிவருகின்றது. பொருட்களின் இருப்பு குறைந்த செலவினத்துக்கு மற்றும் தேறிய ஒடுங்குபாகை பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. செலவினம் தீர்மானிக்கப்படுவது முதல் கிடைப்பதை முதலில் விநியோகிக்கும் முறையியலுக்கு (குஐகுழு) அமையவாகும்.

4. வியாபார பெறுகைகள்

வியாபார பெறுகைகள் ஆரம்ப விலைப்பட்டியலின் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன.

5. காசும், காசுக்கு சமமானவைகளும்

காசுப்பாய்ச்சல் கூற்றின் பணிக்கு காசும், காசுக்கு சமமானவைகளும் என்பதில் கையிலுள்ள காசு, வைப்புக்கள் மற்றும் மூன்று மாதம் அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட ஏனைய குறுங்கால அதிகூடிய திரவ முதலீடுகளும் உள்ளடங்கும்.

6. ஒதுக்கம்

முன்னைய நிகழ்வுகளின் பெறுபேறாக நிறுவனத்திற்கு உரித்தானதாக தற்போது சட்டரீதியான மற்றும் அர்த்தப்பூர்வமான கடப்பாடு உள்ள பட்சத்தில் ஏற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும். கடப்பாடுகளை தீர்ப்பதற்கு வளங்கள் வெளியேறுவது அவசியமாகும் என்துடன், கடப்பாடுகளின் போதியளவான தன்மை பற்றிய நம்பகத்தன்மையை விலைமதிப்புச் செய்ய முடியும்.

7. அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல் செய்யும் திகதிகளில் காணப்படுகின்ற அந்நியச் செலாவணி விகிதங்களின் அடிப்படையில் அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளில் பதிவு செய்யப்படுவதுடன், மேற்படி கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதன் மூலம் கிடைக்கும் இலாபம் மற்றும் நட்டம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

8. ஓய்வூதியப் பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 (டுமுயுளு 19) இன் கீழ் நிறுவனத்தில் ஒரு வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. அடிப்படைச் சம்பளத்தில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் விசேட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

9. உரிய பங்களிப்புத் திட்டம்

நிறுவனத்தின் சகல ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதுடன், மேற்படி ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் முறையே மற்றும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 12மூ மற்றும் 3மூ ஏனைய விசேட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் நிறுவனம் பங்களிப்புத் தொகைகளை செலுத்துகின்றது.

10.வருமானங்களை இனங்காணல்

தேறிய கழிவுடன் சேவைகளின் விற்பனைக்கான விலைப் பட்டியலின் பெறுமதிக்கு அமைய நின்ற அடிப்படையில் வருமானம் இனங்காணப்படுகின்றது.

11.செலவினம்

நின்ற அடிப்படையில் செலவினங்கள் இனங்காணப்படுகின்றன. நிறுவனத்தை பேணிவரும் போது மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை வினைத்திறனுடன் பேணிவரும் போது தாங்கிக் கொள்ளப்பட்ட சகல செலவினங்கள் மற்றும் மேற்படி காலப்பகுதிக்கான இலாபம் அறவிட்டுக் கொள்ளும் வருமானத்திற்கு அறவிடப்பட்டுள்ளது.

12.காசோட்டம்

சுற்று முறையை அடிப்படையாகக் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயார் செய்யப்பட்டுள்ளது.

13.அரச கொடைகள்

சொத்துக்கள் மற்றும் நிதியல்லாத கொடைகள் தொடர்பில் அரசாங்க கொடைகளுக்கான புதிய நியமங்களுக்கு அமைய கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. கொடை கிடைக்கும் என்று நியாயமான சான்றிதழ் இருக்கும் பட்சத்தில் கொடை இனங்காணப்படுவதுடன் குறித்த சகல நிபந்தனைகளுக்கும் ஏற்புடையதாகின்றது. கொடை செலவின விடயங்கள் ஏற்புடையதாகின்ற போது இது நட்டஈடு செலுத்த எதிர்பார்க்கும் செலவினத்துக்கு முறையான அடிப்படையில் கொடையை சீராக்கல் செய்துகொள்ளத் தேவையான காலப்பகுதிக்குள் வருமானமொன்றாக இனங்காணப்படும். கொடை சொத்துக்கு ஏற்புடையதாக உள்ள பட்சத்தில் அது பிற்போடப்பட்ட வருமானமாக கொள்ளப்படும். நிறுவனத்திற்கு நிதியல்லாத கொடை கிடைக்கும் பட்சத்தில் சொத்துக்கள் மற்றும் மேற்படி கொடை பெயரளவிலான பெறுமானங்களில் பதிவு செய்யப்பட்டு சமமான வருடாந்த தவணைகள் மூலம் குறித்த சொத்துக்களின் உத்தேச விளைதிறன்மிக்க ஆயுட் காலம் பற்றி வருமானக் கூற்றில் வெளியிடப்படும்.

பொதுவான வெளிப்படுத்தல்கள்

1. இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 1 மற்றும் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

2. **திறைசேரி உண்டியல்கள், நிலையான சொத்துக்கள் மற்றும் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்தல்**

   திறைசேரி பட்டியல்களின் முதலீடு மற்றும் நிலையான வைப்புக்களின் முதலீடு கணக்குகளில் திரட்டிய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **அறவிட முடியாக் கடன்பட்டோருக்கான ஒதுக்கம்**
   வியாபார பெறுகை குறைப்பதன் கீழ் அறவிட முடியாக் கடன்பட்டோர் தொடர்பிலான ஒதுக்கம் உள்ளடங்குகின்றது. இலங்கை நிதி அதிகாரச் சட்டத்துக்கு அமைய கடன்பட்டோர் பல்வேறு குழுக்களாக பிரிக்கப்படுகின்றார்கள் என்பதுடன், அறவிட முடியாக் கடன்பட்டோருக்கான ஒதுக்கத்தை பின்பற்றி அவர்களின் கொடுப்பனவு முறை ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும்.

கால எல்லை	**ஒதுக்கம்**
நாள்<90	0%
90 நாள்முதல் 180 நாள் வரை	2%
180 நாள்முதல் 360 நாள் வரை	3%
360 நாள்முதல் 720 நாள் வரை	4%
720 நாள்முதல் 1080 நாள் வரை	5%
நாள்,1080	100%

4. **இருப்பு**

   நிறுவனம் தமது சேவைகளை வழங்கும் போது பயன்படுத்துவதற்கு சகல பொருட்களினதும் இருப்புக்களைப் பேணிவருகின்றது. பொருட்களின் இருப்பு குறைந்த செலவினத்துக்கு மற்றும் தேறிய ஒடுங்குபாகை பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. செலவினம் தீர்மானிக்கப்படுவது முதல் கிடைப்பதை முதலில் விநியோகிக்கும் முறையியலுக்கு (குஐகுழு) அமையவாகும்.

5. **பணிக்கொடை ஒதுக்கம்**
   2014 ஆம் ஆண்டு முதல் பணிக்கொடை ஏற்பாடுகளின் மொத்தத் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஓய்வூதியப் பணிக்கொடை தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

6. **அரச கொடைகள்**

   கொடைகளின் மூலமான மூலதனம் கொள்வனவுகளின் தேய்மானத்தின் பகுதி பிற்போடப்பட்ட வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்றன.

7. **மீள்மதிப்பீடு**

மீள்மதிப்பீட்டு அறிக்கையை பூர்த்தி செய்வதற்கு அரசாங்க விலைமதிப்புத் திணைக்களம் ஆண்டினுள் சமர்ப்பித்திருக்கவில்லை.

8. **சொத்துக்களை அகற்றல்**

அகற்றல் செயன்முறை மற்றும் சகல சீராக்கல்களும் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டன.

9. **பதவியணி அபிவிருத்தி நிதியத்துக்கான ஒதுக்கம்**

இந்த ஆண்டில் பதவியணி அபிவிருத்தி நிதியத்துக்கு ஒதுக்குவது சட்டத்திற்கு அமைய மீட்டலின் அடிப்படையில் 0.5மூ ஆக கணிப்பிடப்பட்டது.

10. **மூலதனக் கொடை**

இதன் கீழ் அமைச்சினால் பின்வரும் கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டது.

- ஆடை வடிவமைப்பு, புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தை தாபித்தல்.
- நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைகள் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் நிறுவனம்சார் செயற்பாடுகளை வலுவூட்டல்.
- பல்வகை திறன்களைக் கொண்ட செயலணியை அபிவிருத்தி செய்தல்.

11. **கருத்திட்டங்கள்**

ஐந்து திட்டங்கள் தொடங்கப்பட்டது. அவற்றில் இரண்டு திட்டங்கள் பூர்த்தி செய்யப் பட்டு அதற்குரிய முதலும் வருட இறுதியல் பெற்றுகொம்மப்பட்டது. எஞ்சிய மூன்று திட்டங்களும் 2022ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. அதற்குறிய முதலும், பத்திக், கைத்தறி உள்ளுள் புடவை உற்பத்தி ராஷாங்க அமைச்சுன்லும் வரவு செலவு இயக்கு திணைக்களத்தினாலும் வழங்கபட்டது. ை

i.உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்

இலக்கம்	நிகழ்ச்சி	செலவு ரூ. மி.	பௌதீக நிலமை (அளவு சொற்களில்)	சதவீதம்
1	தொழிநுட்ப அறிவுட்டலுக்கான இயந்திர விருத்திசைதலும் அதற்கு தேவையா வகுப்பறைகளை புதுபித்தலும்	17.06	அடித்துளம் பூர்த்திபட்டுள்ளது தூாண்களுக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. முதல் மாடிக்கான கொன்கிரிட் தட்டு இடப்பட்டுள்ளது	**100%** **100%** **55%**
2	வகுப்பறை தளபாடங்கள்	6.6	300 வகுப்பறை சாதாரனைகதிரைகள் 6 விரிவுரையாளர் கதிரைகள் 150 மேசைகள் 06 வெள்ளை பலகை 12 குளிரூட்டிகள்	**62%**

ii. மற்ற திட்டங்கள்

பத்திக், கைத்தறி மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்திக்கான இராஜாங்க அமைச்சின் நீதி ஒதுக்கீட்டில் செய்ல்படுத்தப்பட்ட திட்டங்கள்

இலக்கம்	திட்டம்	செலவு (ரூ மி)	பௌதீக வீதமான முன்னேற்றம்	
			அளவு	சதவீதம்
1	பத்திக் பயிற்சி	18.4	973	86.87%
2	பத்திக் மையங்களை நிறுவதம்		56	93.33%

தொழில்துறை அமைச்சின் நீதி ஒதுக்கீட்டில் செய்ல்படுத்தப்பட்ட திட்டங்கள்

இலக்கம்	திட்டம்	செலவு (ரூ மி)	பௌதீக வீதமான முன்னேற்றம்	
			அளவு	சதவீதம்
1	திறன் மேம்பாட்டு திட்டம்	4	பயிற்சி திட்டங்கள் -07 பயிற்சி பெற்றவர்கள் - 110	100% 104.76%

திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தால் பெறப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தி செய்ல்படுத்தப்பட்ட திட்டங்கள்

இலக்கம்	திட்டம்	செலவு (ரூ மி)	பௌதீக வீதமான முன்னேற்றம்	
			அளவு	சதவீதம்
1	உற்பத்திறள் மேம்பாட்டு திட்டங்கள்	2.13	தொழிற்சாலைகள் -05	71.42%
2	ஒரு பயனுள்ள பல் திறன் பல்துறை நிறைவேற்றம்	5.42	பயிற்சி பெற்றவர்கள் - 200	50%
3	தோல் மற்றும் பாதணி துறையில் திறன் மேம்பாடு	8.05	பயிற்சி திட்டங்கள் - 10 பயிற்சி பெற்றவர்கள் - 150	100%

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம்

2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று

		2021	2020
	குறிப்பு	ரூபா	ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை சொத்துக்கள்			
காசும், காசுக்கு சமமானவைகளும்	1.1	**148,983,040**	19,658,807
குறுங்கால முதலீடுகள்	1.2	**262,129,359**	265,430,130
கிடைக்க வேண்டியவை	2	**37,913,380**	51,041,649
இருப்புக்கள்	3	**2,931,033**	2,993,173
முற்பணம் செலுத்தல்	4	**2,242,656**	1,240,833
மூலதனப் பணிகளுக்கான முற்பணக் கொடுப்பனவு	5	**20,822,434**	3,762,601
வேறு நடைமுறை சொத்துக்கள்	6	**7,267,116**	9,376,211
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**482,289,019**	**353,503,404**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
உட்கட்டமைப்பு வசதிகள், பொறி மற்றும் உபகரணம் (தேறிய)	7	**93,634,440**	98,571,610
காணி மற்றும் கட்டிடம் (தேறிய)	8	**84,452,376**	61,738,108
		178,086,816	**160,309,719**
மொத்த சொத்துக்கள்		**660,375,834**	**513,813,122**
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டிய நிதி	9	**13,427,291**	14,807,171
குறுங் கால ஏற்பாடுகள்	10	**2,776,388**	2,984,900
		16,203,679	17,792,071
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஓய்வுதியப் பணிக்கொடை	11	**48,214,906**	50,956,958
		48,214,906	50,956,958
மொத்த பொறுப்புக்கள்		**64,418,585**	**68,749,029**
தேறிய சொத்துக்கள்		**595,957,250**	**445,064,094**
தேறிய சொத்துக்கள் /உரிமையாண்மை			
அரச பங்களிப்பு மற்றும் நிதியுதவி	12	**216,077,975**	141,225,370
வேறு கருத்திட்டங்கள்	13	**63,942,332**	27,293,819
திரட்டிய மிகை (குறைக்க)	14	**315,936,943**	276,544,905
மொத்தத் தேறிய சொத்துக்கள் மிகை/ (குறை)		**595,957,250**	**445,064,094**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விரிவான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் பகுதியொன்றாகும்.
(அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகளின் மூலம் குறைப்பது வெளிப்படுத்தப்படுகின்றது.)
இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடையதாகும்.



.....

ஈ.டபிள்யு.ஏ.ஐ. சிறிவர்த்தன
கணக்காளர்



.....

பீ.எஸ்.டபிள்யு.கே. பெர்ணாந்து
பணிப்பாளர் நாயகம்

இந்த நிதக் கூற்றுக்களை தயார் செய்வது தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றது.

இந்த நிதிக் கூற்றுக்கள் 2022.02.24 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.



.....

கே.ஜி.ஆர். விமலசூரிய
பணிப்பாளர் சபை உறுப்பினர்



.....

பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி
தவிசாளர்

2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக்	கூற்று	2021	2020
	குறிப்பு	ரூபா	ரூபா
வருமானம்			
கட்டணங்கள் மற்றும் ஏனையன	15	198,109,924	162,175,048
மொத்த செயற்பாட்டு வருமானம்		198,109,924	162,175,048
செலவினம்			
ஆளுக்குரிய சம்பளங்கள் (சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் பயன்கள்)	16	107,038,328	109,599,533
பிரயாணச் செலவினம்	17	778,100	547,900
வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருட்கள்	18	9,644,611	8,200,952
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு	19	5,744,261	11,281,053
ஒப்பந்த சேவைகள்	20	16,961,030	15,616,951
தேய்மானம், பெறுமானத்தேய்வு செலவினம்	21	27,511,216	25,637,035
வேறு செலவினம்	22	17,148,310	12,871,288
நிதிச் செலவினம்	23	252,566	75,148
		(185,078,422)	(183,829,861)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை (குறை)		13,031,502	(21,654,813)
வேறு வருமானங்கள்			
பிற்போடப்பட்ட வருமானம்	24	24,407,876	23,110,221
வேறு மொத்த வருமானம்		24,407,876	23,110,221
காலப் பகுதிக்கான மொத்த மிகை/ (குறை)		37,439,379	1,455,408

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம்
2021.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

